# ஆகஸ்ட்– 09– வியாழன்
## புனித தெரேசா பெனடிக்டா
### “ நீர் மெசியா,உயிருள்ளகடவுளின் மகன்’’ (மத்.16:16)

## முதல் வாசகம் ஏரேமியா31 : 31 - 34

இதோ, நாள்கள் வருகின்றன. அப்பொழுது நான் இஸ்ரயேல் வீட்டாரோடும் யூதாவின் வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வேன், என்கிறார் ஆண்டவர். அவர்களுடைய மூதாதையரை எகிப்து நாட்டினின்று விடுவிப்பதற்காக, அவர்களை நான் கைப்பிடித்து நடத்தி வந்த பொழுது அவர்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையைப் போன்று இது இராது. நான் அவர்களின் தலைவராய் இருந்தும், என் உடன்படிக்கையை அவர்கள் மீறிவிட்டார்கள், என்கிறார் ஆண்டவர்.அந்நாள்களுக்குப் பிறகு, இஸ்ரயேல் வீட்டாரோடு நான் செய்யவிருக்கும் உடன்படிக்கை இதுவே: என்சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன் அதை அவர்களது இதயத்தில் எழுதிவைப்பேன். நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன் அவர்கள் என்மக்களாய் இருப்பார்கள், என்கிறார் ஆண்டவர். இனிமேல் எவரும் ”ஆண்டவரை அறிந்துகொள்ளும்” எனத் தமக்கு அடுத்திருப்பவருக்கோ சகோதரருக்கோ கற்றுத்தரமாட்டார். ஏனெனில் அவர்களுள் பெரியோர் முதல் சிறியோர் வரை அனைவரும் என்னை அறிந்துகொள்வர், என்கிறார் ஆண்டவர். அவர்களது தீச்செயலை நான் மன்னித்துவிடுவேன் அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவுகூரமாட்டேன்.

**பதில்பாடல் :** கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே
படைத்தருளும்.

## நற்செய்தி : மத்தேயு16: 13 – 23

அக்காலத்தில்இயேசு, பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம்சீடரை நோக்கி, ”மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?” என்றுகேட்டார்.அதற்கு அவர்கள், ”சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறுசிலர் எலியா எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்கின்றனர்” என்றார்கள்.”ஆனால் நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?” என்று அவர்கேட்டார்.சீமோன் பேதுரு மறுமொழியாக, ”நீர் மெசியா, வாழும் கடவுளின்மகன்” என்று உரைத்தார். அதற்கு இயேசு, ”யோனாவின் மகனான சீமோனே, நீ பேறுபெற்றவன். ஏனெனில் எந்தமனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார். எனவே நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு. இந்தப்பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா.விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்” என்றார்.பின்னர், தாம் மெசியா என்பதை எவரிடமும் சொல்லவேண்டாம் என்று இயேசு சீடரிடம் கண்டிப்பாய்க் கூறினார்.இயேசு தாம் எருசலேமுக்குப் போய் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் பலவாறு துன்பப்படவும் கொலை செய்யப்படவும் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்பதைத் தம் சீடருக்கு அந்நேரம் முதல் எடுத்துரைக்கத் தொடங்கினார்.பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கடிந்துகொண்டு, ”ஆண்டவரே, இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கவே கூடாது” என்றார்.ஆனால் இயேசு பேதுருவைத் திரும்பிப் பார்த்து, ”என் கண்முன் நில்லாதே சாத்தானே, நீ எனக்குத் தடையாய் இருக்கிறாய் ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்” என்றார்.

**தியானம்:** புனித பேதுருவின் ஆழமான விசுவாசத்தினால் இறைமகன் இயேவுசுவின் தெய்வீகத் தன்மைபற்றிய விளக்கம் இறைவனால் அவருக்க வெளிப்படுத்தப்பட்டது. இறைமகன் இயேசுவைப்பற்றிய புனித பேதுருவின் அறிக்கைானது திருச்சபைவரலாற்றில் முக்கிய் இடத்தினை பெற்றிர்கின்றது. “நீர் மெசியா உயிருள்ள கடவுளின் மகன்’’ (மத்.16:16) என்று நமது உறுதியான விசுவாசத்தை அறிக்கையிடுகினறார். அவ்வாறே இன்றைய முதல் வாசகத்தில் எரேமியாவின் நாவிலிருந்து ஆசீர்வாதவார்த்தைகள் புறப்படுகின்றன. புதுப்படைப்பாக எல்லாவற்றையும் மாற்றுகிறவரான ஆண்டவரில் நம்பிக்கை வைக்குமாறு தம் மக்களை அவர் அழைக்கிறார். ஆகவே இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் இறைமகன் இயேசுவில் நாங்கள் கொணடுள்ள உறுதியானதாக இருக்கவேண்டும் என்பதை நினைவு படுத்தி விசுவாசத்தின் பாறையான பேதுருவின் வழி நடக்க எம்மை அழைக்கின்றது. எனவே தான் எமது நல்வாழ்க்கை முறையால் எமது விசுவாச வாழ்விற்கு உயிர்கொடுக்க முன்வருவோம்.